# 4. குழுவின் அறிக்கை அளித்தல்

## பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுவின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன், பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டுக்கான பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் நான்காவது அறிக்கையைக் குழுவின் சார்பாக உவகையுடன் பேரவைக்கு அளிக்கிறேன்.*

# 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

## (அ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு, 2023

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*